**தலைப்பு 303 – நெசவுக் கைத்தொழில் திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

---

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

---

நெசவுக் கைத்தொழில் திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் உணவு ஆணையாளர் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 யூலை 07 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2021 சனவரி 21 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினாலான தாக்கத்தைத் தவிர, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந் நிதிக் கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான உணவு ஆணையாளர் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புகள்**

---

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கும் இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற நிதிக்கூற்றுக்களை

தயாரிக்க கூடியவாறான உள்ளகக் கட்டுப்பாட்டைத் தீர்மானித்தல் என்பன கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களமானது வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடியவாறு தனது வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேண வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டின் பொருட்டு ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றைத் தயாரித்து அதனை பேணுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் பிரமான கணக்கீட்டு உத்தியோகத்தரும் சான்றுறுதிப்படுத்த வேண்டும். அம்முறைமையின் செயற்திறன் அவ்வவ்போது மீளாய்வு செய்யப்பட்டு அதற்கமைய முறைமையை ஆக்கபூர்வமாக்குவதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களது கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றதென நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கையை வழங்குவதும் எனது நோக்கமாகும். நியாயமான சான்றுறுதிப்படுத்தல் உயர் மட்ட சான்றுறுதிப்படுத்தலாகும். எனினும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதன் உறுதிப்படுத்தல் அல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் ஏற்படக்கூடுமாதலால் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோர் பொருளாதாரத் தீர்மானங்களை மேற்கொள்ளும்போது அது தொடர்பாக கருத்திற் கொள்ள வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில் துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும்போதும் மதிப்பிடும்போதும் சந்தர்ப்பத்திற்கேற்றவாறான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்த்துக் கொள்ளல் என்பன மோசடி ஏற்படக் காரணமாக அமையலாம்.

- சந்தர்ப்பத்திற்கேற்றவாறான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வம் தொடர்பான அபிப்பிராயத்தை வெளியிடுவதற்குக் கருதவில்லை.

- வெளிப்படுத்தல்கள் அடங்லான நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் என்பன பொருத்தமான மற்றும் நியாயமானவாறு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும்போது, நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வின் மூலம் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டபூர்வ தேவைகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்

(ஆ) சென்ற ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி நிலைமை தொடர்பான கூற்று

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டில் விற்பனை செய்யப்பட்ட திணைக்களத்திற்குச் சொந்தமான 2 வாகனங்களின் கிரியமாகிய ரூபா 1,350,000 ஆன பெறுமதியினை ஆதன பொறி உபகரணங்களிலிருந்து நீக்கப்படவில்லை. | விற்பனை செய்யப்பட்ட வாகனங்களின் பெறுமதியினை ஆதன பொறி உபகரணங் களிலிருந்து நீக்கப்பட வேண்டும். | 2020 வருடம் திருத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2018 ஆம் வருடம் கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களின் பெறுமதியான ரூபா 2,108,000 ஆதன பொறி உபகரணங்களின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்திற்கு தொடர்புடைய நிரந்தர சொத்துக்களை ஆதன பொறி உபகரணங்களின் கீழ் காட்டப்பட வேண்டும். | - மேற்படி - |
| (இ) | திணைக்களத்திற்குச் சொந்தமான கட்டுபெத்தையில் இருக்கின்ற கட்டிடத் தொகுதி மற்றும் இன்னும் 12 இடங்களில் அமைந்துள்ள 25 கட்டிடங்களின் பெறுமதியினை மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கிலிடப்பட்டு இருக்கவில்லை. | திணைக்களத்திற்கு சொந்தமான கட்டிடங்களை மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கிலிடப்பட வேண்டும். | இது சம்பந்தமாக தொடர்ந்தும் விலை மதிப்பீட்டு திணைக்களத்திற்கு வாய் மூலமாகவும் மற்றும் எழுத்து மூலமாகவும் அறிவுறுத்தப்பட்டிருப்பதுடன் இன்னும் மதிப்பீட்டு அறிக்கையினை பெற்று தரப்படவில்லை. இது தொடர்பாக கணக்காய்வு முகாமைத்துவக் குழு கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டு விலை மதிப்பு திணைக்களத்தினை அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

### 1.6.2 சட்டம், ஒழுங்கு, பிரமாணம் ஆகியவைகளுடன் இணங்காமை

மாதிரிகளுக்கான கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டம், ஒழுங்கு, பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே ஒப்பிட்டுக் காட்டப்படுகின்றன.

| சட்டம், ஒழுங்கு, பிரமாணம் ஆகியவற்றிற்கான கவனத்திற்கு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| அரச காணிகளைக் கையளித்தல் தொடர்பான வழிகாட்டல் என்ற தலைப்பில் சனாதிபதி செயலகத்தினால் | குத்தகைக்கு வழங்கப்பட்ட காணிகள் தொடர்பான ஆவணங்களை இற்றைப்படுத்தி பேணுதல், உரிய காலத்தில் குத்தகை ஒப்பந்தங்களை புதுப்பித்தல் மற்றும் நாளாந்தம் குத்தகை வாடகை | பதவியினர் ஒருவரின் தலைமையின் அலகு ஒன்றினை அமைத்து நிலுவை வருமானத்தினை அறவிடப் படுவதற்கான | எதிர்காலத்தில் இவ் அலகு தொடர்பாக புது அதிகாரிகள் நியமிக்கப்பட்டு வினைத்திறனுடன் முன்னெடுத்துச் செல்வதற்கான நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| வெளியிடப்பட்ட இலக்கம் எஸ்ஈஅயி/ஏ/4/34 கொண்ட 1995 யூலை 21 ஆம் திகதிய வழிகாட்டலின் 9 ஆம் பந்தி | சேகரிப்பினை மேற்கொள்வது பற்றி கரிசனையாக இருத்தல் குத்தகைதாரரால் ஒப்பந்தத்திலுள்ள சரத்து மற்றும் நிபந்தனைகளை பின்பற்றுவது தொடர்பாக மேற்பார்வையிடல் மற்றும் அவதானித்தல் மற்றும் ஒப்பந்த நிபந்தனைகளை மீறப்படும் சந்தர்ப்பங்களில் சொத்துக்களுக்கான உரிமையினை மீளப் பெறுவதற்காக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளல் ஆகிய கருமங்களை செய்வதற்காக பதவியினர் ஒருவரின் தலைமையின் கீழ் விசேட அலகொன்றினை அமைக்க வேண்டியிருந்தது. ஆயினும் திணைக்களத்தினால் குத்தகைக்கு விடப்பட்ட சக்தி வள நெசவு வியாபாரம் தொடர்பாக 2015 நவம்பர் மாதம் நெசவு தொழில்நுட்ப நிபுணர் ஒருவர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் இருவரைக் கொண்டு திணைக்களத்தினுள் அமைக்கப்பட்ட விசேட அலகினை வினைததிறனுடன் செயல்படாமை அவதானிக்கப்பட்டது. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எடுப்பேன். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் திணைக்களத்தினால் குத்தகைக்கு விடப்பட்ட சக்திவள நெசவு வியாபார 11 நிறுவனங்களில் 06 இல் ரூபா 16,148,250 க்கான நிலுவை குத்தகைப் பணம் ஒருந்தது. குத்தகை ஒப்பந்தங்களை இற்றைப்படுத்தப்பட்டு குத்தகை தொகையினை புதுப்பித்தலுக்கான நடவடிக்கை எடுக்காமை, காணி மற்றும் கட்டிடங்களுக்கான மேற்பார்வை செய்யாமை, மற்றும் பின் தேடிப் பார்த்தலுக்காக நடவடிக்கை எடுக்காமை மற்றும் சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கு தாமதப்படல் இதற்கான காரணிகளாக இருந்தன. எவ்வாறாயினும், இந்நிலுவைத் தொகையினை அறவிடப்படுவதற்காக சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கு சட்டமா அதிபரின் ஆலோசனை கோரப்பட்டுள்ளது. | நிலுவைத் தொகையினை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | அவதானிப்பினை ஏற்றுக் கொள்கின்றேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் அமைக்கப்பட்டுள்ள நெசவுக் கைத்தொழில் பயிற்சி பாடசாலைகள் 14 மற்றும் கெட்டம்பே மற்றும் கட்டுபெத்தை வரை பயிற்சி பாடசாலைகள் மூலம் ஒரு வருடம கால பயிற்சி நெறிக்காக 350 மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கான வசதிகள் | திட்டமிட்டவாறு பாடநெறிகள் நடாத்தப்பட வேண்டும். | கல்வியல் கல்லூரிகளில் சேரும் போது நெசவுக் கைத்தொழில் இறுதிச் சான்றிதழ் பத்திரத்திற்கு ஓரளவு புள்ளியினை பெற்றுக் கொடுக்கப்பட்ட போதிலும், சென்ற |

| | | |
|---|---|---|
| இருப்பதுடன் மீளாய்வு ஆண்டில் பயிற்சி நெறிக்காக 175 மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. வருடத்தின் போது 160 மாணவர்கள் மாத்திரம் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்ததுடன் அது சேர்த:தக் கொள்ளக் கூடிய மாணவர் எண்ணிக்கையில் சுமார் நூற்றுக்கு 45 ஆக இருந்தது. மேலும் நடாத்தப்படும் பாடநெறிகளுள் தேசிய தொழிற்தகைமை (NVQ3) சான்றிதழினை கட்டுபெத்தை பயிற்சி மத்திய நிலையத்தில் ஒரு பாடநெறிக்கு மாத்திரம் பெற்றுக் கொடுக்கக்கூடியதாக இருந்தது. | | ஆண்டு முதல் அச்செயல்முறையினை நீக்கப்பட்டமை மாணவர்களின் வருகையினை குறைவதற்கு காரணியாக உள்ளமையினை அனுமானிக்க கூடியதாக உள்ளது. NVQ பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

## 3.2 பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) திணைக்களத்தினால் அமுல்படுத்தப்படும் சுய விருப்ப நஷ்டம் வழங்கும் முறைமையின் கீழ் நஷ்ட ஈட்டு தொகையினை பெற்றுக் கொள்வதற்கும் முன்வராத 63 தரப்பினர் தொடர்பாக ரூபா 4,549,169, 2017 வருடம் முதல் வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளதுடன் அவர்களின் உரித்தினை ஊர்ஜிதம் செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட தொகையினை பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | நஷ்டஈட்டு பெறுநர்களின் பணத்தினை சம்பந்தப்பட்ட நபர்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு அல்லது உரித்தினை ஊர்ஜிதம் செய்யப்படாத தொகையினை பொது வருமானத்தில் சேர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | இது தொடர்பாக அமைச்சின் கணக்காய்வு முகாமைத்துவக் குழு கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது. அதன் ஆலோசனைக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன்படி 2020.06.30 திகதியன்று புதினப் பத்திரிகை விளம்பரம் ஒன்று வெளியிடப்பட்டதுடன் 14 நாட்களுக்குள் முன்வராத நஷ்டஈட்டு பெறுநர்களின் பணத்தினை பொது வருமானத்தில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2017 ஆம் வருடம் கிராம சேவகர் பிரிவு மட்டத்திலான நாடாளாவிய நெசவு கைத்தொழில் கணக்கெடுப்புக்காக விவரணமான தரவுகள் சேகரிப்பினை இரு கட்டங்களின் கீழ் ஆரம்பிக்கப்பட்டன. குடி மற்றும் புள்ளிவிபர திணைக்களம் மற்றும் நெசவுக் கைத்தொழில் திணைக்களம் மாவட்ட செயலகத்துடன் ஒன்று சேர்ந்து மேற்கொள்ளப்பட்ட இக்கணக்கெடுப்புக்காக ரூபா 16 மில்லியனுக்கான செலவு மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் 2017 ஆம் ஆண்டு கணக்கெடுப்பினை முடிப்பதற் திட்டமிடப்பட்டிருந்தது. 2018 வருடம் மற்றும் 2019 ஆம் வருடம் கணக்கெடுப்பின் முதற் கட்டத்தினை முடிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 6,133,535 செலசிடப்பட்டிருந்தது. ஆயினும், 2020 ஆகஸ்ட் 31 ஆந் திகதி உள்ளவாறு இரண்டாம் கட்டத்திற்கான வேலைகள் முடிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்கீடு செயற்பாடுகள் மதிப்பீடு செய்யப்பட்ட படி மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட வேண்டும். | 2021 வருடம் இரண்டாம் கட்டத்திற்கு தேவையான ஒதுக்கீடு கோரப்பட்டுள்ளதுடன் ஒதுக்கீடு கிடைத்ததன் பின்னர் அதனை முடிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**3.3 பெறுகைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கட்டுபெத்தை பிரிவில் மின் சுற்றினை தாபிப்பதற்காக 2019 செப்தம்பர் 10 ஆந் திகதி விலை மனு கோரல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதற்கான மதிப்பீட்டு பிரியம் ரூபா 6,938,940 ஆக இருந்ததுடன் ரூபா 6,685,630 க்கான விலையில் | பொது பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளுக்கு அமைய செயற்பட வேண்டும். | அவதானிப்பினை ஏற்றுக் கொள்கின்றேன். எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் பெறுகை செயற்பாடுகளின் போது வழிகாட்டல் கோவைக்கு அமைய செயற்படுவதற்கு குறித்துக் கொண்டேன். |

ஒப்பந்தத்தினை வழங்கப்பட்டிருந்தது. 2007 ஒக்தோபர் 03 ஆந் திகதிய அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் மேலதிக 13 இன் படி ரூபா 05 மில்லியனுக்கு மேலான அரசின் ஒவ்வொரு ஒப்பந்தத்திற்காகவும் ஆஜராகும் விலைமனுதாரர்களால் பொது ஒப்பந்த பதிவாளரிடம் பதிவு சான்றிதழ் ஒன்றினை சமர்ப்பிக்க வேண்டியுள்ளதுடன் அவ்வாறு அல்லாத விலை மனுதாரர்களை மதிப்பீடு செய்வதற்கு செயற்படக் கூடாது அவ்வாறே ஒப்பந்தத்தினை வழங்கியதன் பின்னர் ஒப்பந்தக்காரரினால் ஒப்பந்தத்தினை பதிவு செய்ய வேண்டி இருந்த போதிலும் திணைக்களத்தினால் சம்பந்தப்பட்ட வழிகாட்டலின் படி செயற்பட்டிருக்கவில்லை.

## 4. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்திற்கான உதவி பணிப்பாளர் பதவிக்காக பொருத்தமான அதிகாரி ஒருவரை பெற்றுக் கொள்வதற்காக அரச நிர்வாகமற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சிடம் கோரிக்கை விடப்பட்டிருந்த போதிலும், 2020 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் அவ் வெற்றிடம் அவ்வாறே இருந்தது. | அத்தியாவசிய வெற்றிடத்தினை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | அவ் வெற்றிடத்திற்காக அதிகாரி ஒருவரை இணைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. |
| (ஆ) | இரண்டாம் மட்டத்திலான 33 பதவிகள் வெற்றிடங்களாக உள்ளதுடன் அதில் 13 வெற்றிட பதவிகள் இல்லது போனமையினால் அவை வெற்றிடங்களாக உள்ளன. மிகுதி 20 வெற்றிடங்களுள் உதவி அபிவிருத்தி பதவி மற்றும் தொழில்நுட்ப | வெற்றிடங்களை நிரப்பிக் கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | முகாமைத்துவ சேவைகள் சுற்று நிருபம் 01/2020 மூலம் உத்தியோகத்தர்களை சேர்த்துக் கொள்வதனை தற்காலிகமாக நிறுத்தப் பட்டுள்ளமையினை அறிவிக்கப்பட்டுள்ள |

உத்தியோக பதவிகளில் வெற்றிடங்கள் தலா ஒவ்வொன்றாகவும், 5 வெற்றிடங்கள் உதவி முகாமைத்துவ வெற்றிடங்கள் உதவி முகாமைத்துவ வெற்றிடங்களிலும், நெசவு ஆலோசகர் பதவிகளில் 13 வெற்றிடங்களும் இருந்தன.

துடன் அமைசின் உடன்பாட்டினை பெற்றுக் கொண்டு ஆட்சேர்ப்பு தொடர்பான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.